
விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 21 செவ்வாய்க்கிழமை (07.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 353

# பாராளுமன்றத்துக்குள் பாதுகாப்பு இல்லை
## சபையை புறக்கணித்து எதிர்க்கட்சியினர் போராட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்குள் பாதுகாப்பு இல்லை என தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று சபை அமர்வை புறக்கணித்து பாராளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பாராளுமன்றம் நேற்று கூடிய நிலையில் சபை நடவடிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித் 15



## நாவற்குழியில் வாள்வெட்டு
### இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி புதிய குடியேற்றத் திட்டம் குடியிருப்பு பகுதியில் நேற்று இரவு இரு குழுக்களுக்கு இடை 15

### சாவகச்சேரியிலும்
## எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி 15

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதிரணியை சந்தித்த மகிந்த



(கொழும்பு)

பாராளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடி 15

### இலங்கையின் நடவடிக்கை தொடர்பில்
# இந்தியா அதிருப்தி
## நிதியமைச்சர் பசிலிடம் நேரடியாக கண்டனம் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கையின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்து இந்தியா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த நிதியமைச்சர் பசிலிடம் இந்தியா தனது அதிருப்தியை நேரடியாகத் தெரிவித்துள்ளது.

அண்மையில் இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நிதி அமைச்சர் பசில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

இந்த விஜயத்தின்போது இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருடன் 15

## சிறப்பு முத்திரையுடன் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு வந்தன

(கொழும்பு)

சிறப்பு முத்திரையுடன் கூடிய எரிவாயு சிலிண்டர்கள் சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

பாவனையாளர் 15

## கொரோனா 23 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் 15

## சபாநாயகரின் கட்டுப்பாட்டை பாராளுமன்றம் இழந்துள்ளது
### எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கிரியெல்ல

(கொழும்பு)

பாராளுமன்றம் சபாநாயகரின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டே, அவர் இதனைக் கூறியுள்ளார். 15

## கிளிநொச்சியில் உயிரிழந்தவருக்கு கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உயிரிழந்த 63 வயது முதியவர் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15

## வட்டக்கச்சியில் கால்வாயில் பாய்ந்து டிப்பர் விபத்து
### ஸ்தலத்திலேயே ஒருவர் பலி

(தருமபுரம்)

புளியம்பொக்கணையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் வட்டக்கச்சிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து கால்வாயில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் டிப்பரில் பயணித்த ஒரு 15

## வவுனியாவிலும் எரிவாயு அடுப்பு வெடித்தது

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது.

நேற்று இரவு இடம்பெற்ற இச் 15

### முல்லைத்தீவு கடலில்
## காணாமல்போன மூவரும் சடலங்களாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடலில் மூழ்கி காணாமல்போன மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு கடற்கரைக்கு வானில் வந்த மூன்று இளைஞர்கள் கடலில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Scanned with CamScanner

# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் சுந்தரலிங்கம்

**தோற்றம் : 14.11.1934 மறைவு : 03.12.2021**



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சுந்தரலிங்கம் கடந்த 03.12.2021 (வெள்ளிக்கிழமை) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் அனுஷா (பிரான்ஸ்), கலாஜோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், கமலேஸ்வரி, பஞ்சலிங்கம் (உரிமையாளர் - அன்பு ஜூவலரி, மானிப்பாய்), மகாலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சூரியகுமார் (பிரான்ஸ்), பிரேமதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துசித் (லண்டன்), ஷரிசாந் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம், பால லோஜினி (கனடா), மன்றுலாடி, சியாமளா, திலகராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தம்பு, கற்பகம், தங்கம்மா, ஐயாத்துரை, செல்வபாக்கியம், புஸ்பராணி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*(இறுதிக் கிரியைகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறும்.)*

(8961)

**சீரணிச் சந்தி,**
**சண்டிலிப்பாய்.**

தகவல் :-
**குடும்பத்தினர்**

## இந்து பௌத்த கலாசார பேரவை ஊடாக வடக்கு மாகாணத்தில் இரண்டாவது மொழி கற்கைநெறி மூலம் 23,000 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வடக்கில் சாதனையை நிலைநாட்டியுள்ளனர் - என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர்

இந்து பௌத்த கலாசார பேரவையால் 04.12.2021 அன்று நடாத்தப்பட்ட சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ ஜீவன் தியாகராஜா அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அத்துடன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. கணபதிப்பிள்ளை மகேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்துகொண்டார். கடந்த covid -19 தடைகளிற்கு முன்பு பரீட்சை எழுதிய 65 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் இந்து பௌத்த கலாசார பேரவை அரங்கில் நடைபெற்றது. அதில் மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டதுடன் மட்டுமல்லாது தங்களுடைய சிங்கள மொழி ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாக வரவேற்புரை, நன்றியுரை, நோக்கமும் சிந்தனையும் மற்றும் பாடல் என்பவற்றை சிங்கள மொழியில் செய்து காட்டினர்.





வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ ஜீவன் தியாகராஜா அவர்கள், இவ்வாறு கடந்தகாலத்தில் 23,000 மாணவர்களை வடக்கு மாகாணம் முழுவதும் கற்பித்து சிறப்பாக நடாத்திவரும் இந்நிறுவனத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். இங்கே கல்வி கற்கும் மாணவர்களுக்கு வடக்கு மாகாணத்தில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும், ஆசிரியர் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் நூற்றுக்கு மேற்பட்டவர்களை அரச பாடசாலைகளில் நியமிப்பதற்குரிய வேலைத்திட்டங்களை செய்து தருவேன் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் ஆசிரிய பயிற்சி மாணவர்களுக்கு தெரிவித்தார்.

அதேபோல வடக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு அவர்கள், வடக்கு மாகாண ஆளுநர் எதனை உங்களுக்கு உறுதிப்படுத்தினாரோ அதை அவருடன் இணைந்து இராணுவ கட்டளைத் தளபதி எனும் முறையில் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அரசிடம் வேண்டுகோள் விடுப்பேன் என்றும் இம்மாணவர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு தலைமைத்துவ பயிற்சியும் வழங்கப்படும் என்றும் உச்சரிப்பை செவ்வனே சொல்லிக் கொடுப்பதற்கும் தமது இராணுவத்தில் பணியாற்றும் கற்பிக்கக்கூடிய இராணுவ வீராங்கனைகளை அனுப்பி உதவுவதாகவும் எந்தநேரத்திலும் தேசமான்ய M.T.S. இராமச்சந்திரன் அவர்களுக்கும் இந்து பௌத்த கலாசார பேரவைக்கும் எனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன் எனவும் தெரிவித்தார்.



யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு கணபதிப்பிள்ளை மகேசன் அவர்கள், இந்நிறுவனத்தின் சேவையை நான் பலரும் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இவ்வாறான 23,000 மாணவர்களை இந்து பௌத்த கலாசார பேரவை கற்பித்தது யாழ். மாவட்டத்தில் ஒரு பெரிய வேலைத்திட்டம்தான். அதற்கான நிதியை தனக்குச் சொந்தமான சர்வதேச சட்ட நிறுவனத்தில் இருந்து மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியது பாராட்டக்கூடிய விடயமாகும். அதையும் பாராட்டுகிறேன் என்றும் வடக்கு மாகாண மாணவர்களுக்கும் இரண்டாம் மொழி அவசியம் என்பதையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன் எனவும் கூறினார். இச்சந்தர்ப்பத்தில் மாணவரின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

(8959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

# புதிய அடையாளத்துடன் மீண்டும் எரிவாயு சிலிண்டர்கள்

(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் சிலிண்டரை மீள நுகர்வோருக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் புதிய எரிவாயு சிலிண்டர்களின் வால்வுகளில் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்துடன் கூடிய பொலித்தீன் பாதுகாப்பு உறை இடப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

3 நிபந்தனைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் அனுமதி வழங்கப்பட்டது.

எரிவாயு கசிவை கண்டறியும் மணத்தை உருவாக்கும் எதில் மெகப்டன் (Ethyl Mercaptan) பதார்த்தம், கொள்கலனில் 14 அலகுகளாக இருக்க வேண்டும்.

இருப்பினும் தற்போது 5 அலகுகளாக உள்ளதன் காரணமாக, எரிவாயு விநியோகம் மற்றும் விற்பனை என்பன இடை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 11 குற்றச்சாட்டுகளில் இருந்து முன்னாள் அமைச்சர் விடுதலை

(கொழும்பு)

2016 மத்திய வங்கியின் பிணைமுறி வழங்கல் மோசடி தொடர்பான வழக்கில் 22 குற்றச்சாட்டுகளில் 11 குற்றச் சாட்டுக்களிலிருந்து முன்னாள் அமைச்சர் ரவி கருணாநா யக்க உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல்நீதி மன்ற விசேட தீர்ப்பாயம் முன் னிலையில் விசாரணைக்கு வந்தபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (நி-5)



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 7.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான portable Ultra Sound Scanner மக்கள் வங்கியினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான ரஞ்சித் கொடித்துவக்கு, சந்தைப்படுத்தல் தலைவர் நாலக விஜயவர்த்தன, யாழ். பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் குழந்தைவேலு கோடீஸ்வரன், ஆகியோரு டன் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி, பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(படம்:-ரவிசாந், சிவசாந்தன்)

# தனது பலவீனத்தை மறைக்க அரசு அடக்குமுறையை கையில் எடுத்துள்ளது

## எதிர்ப்புப் போராட்டத்தில் வேலுகுமார்

(கொழும்பு)

அரசு தனது பலவீனத்தை மறைக்க, பாராளுமன்றத்தில் அடக்குமுறையை, அராஜகத்தை கையில் எடுத்துள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார். நேற்று பாராளுமன்ற அமர்வை பகிஷ்கரித்து, பாராளுமன்ற முற்றத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டத்தின் போது அவர் இதனை தெரிவித்தார்.

அரசு பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. நாட்டில் மின்சாரத்தடை, சமையல் எரி வாயு தட்டுப்பாடு, மசகு எண்ணெய் இல்லை, மண்ணெண்ணெய் பற்றாகுறை, போன்ற காரணங்களால் மக்கள் கோபத்தில் கொந்தளித்து போய் உள்ளனர். அரசு தனது பலவீனத்தை மறைக்க பாராளுமன்றத்தில் அடக்குமுறையை, அராஜகத்தை கையில் எடுத்துள்ளது.

நாட்டின் ஜனநாயகத்தின் உயரிய தளம் பாராளுமன்றம். அங்கே மக்களது பிரச்சினைகளை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான பூரண வாய்ப்பு காணப்பட வேண்டும். கருத்து சுதந்திரம் பூரணமாக பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான வசதியை சபாநாயகர் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். ஆனால் இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மக்கள் பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் பேச முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரச தரப்பின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைப்பதற்கான சூழ் நிலையை சபாநாயகர் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

அதுவே, சர்வதேசத்திற்கு எமது நாட்டை பற்றிய சரியான செய்தியை பெற்றுக்கொடுக்கும்.

அதனை விடுத்து மக்கள் பிரதி நிதிகளின் கருத்து சுதந்திரத்தை அடக்கி ஒடுக்கி பிரச்சினைகளை மூடி மறைத்து இந்த அரசாங்கத்தை முன்கொண்டு செல்ல முடியும் என நினைப்பது வெறும் சிறுபிள்ளைத்தனமான செயலாகும் என மேலும் தெரிவித்தார். (நி-5)

# வழங்குநரை பதிவு செய்தல்
# கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி-2022

| தொகுதி (A) | பொருட்கள் |
|---|---|
| A-01 | காகிதாதி எழுதுபொருட்கள் |
| A-02 | அலுவலக உபகரணங்கள் (தளபாடம்) |
| A-03 | சித்த மருத்துவ மருந்துகள் |
| A-04 | நூலக நூல்கள் |
| A-05 | துணி வகை |
| A-06 | கட்டட பொருட்கள் |
| A-07 | கல்,மணல் |
| A-08 | தீந்தை வகை |
| A-09 | நீர்க்குழாய் |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள் |
| A-11 | மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கி |
| A-13 | இரும்புப் பொருட்கள் |
| A-14 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-15 | பனைமரங்கள், சலாகைகள் |
| A-16 | வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலம் |
| A-17 | கணினி, அச்சுப்பொறி, பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல், நச்சுநிரல் எதிர்ப்பான், செருகி மற்றும் இவற்றிற்கான உதிரிப்பாகம் |
| A-18 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A-19 | பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள் |
| A-20 | அலங்காரப் பொருட்கள் |
| A-21 | இலத்திரனியல் பொருட்கள் |
| A-22 | மரக்கன்றுகள் (பழமரங்கள், நிழல்தரும் மரங்கள், பூங்கன்றுகள் முதலியன) |
| A-23 | சிற்றுண்டி மற்றும் உணவு வகைகள் |
| A-24 | கழிவகற்றும் கூடைகள் |

| தொகுதி (B) | சேவைகள் |
|---|---|
| B-01 | அச்சிடுதல்,பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல் கட்டுதல் |
| B-02 | மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்தல் |
| B-03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல் |
| B-04 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B-05 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடுதல் |
| B-06 | மின்சாரத்திருத்தம் |
| B-07 | இலத்திரனியல் சாதனத்திருத்தம் |
| B-08 | வாகனங்கள் சுத்திகரிப்பு |
| B-09 | கோலவுடை தைத்தல் |
| B-10 | கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு |
| B-11 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B-12 | வீதி விளக்குகள் பொருத்துதல் |
| B-13 | மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டுதல் |
| B-14 | வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலைகள் |
| B-15 | கழிவகற்றல் சேவை (Gully emptier Service) |

| தொகுதி (C) | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C-01 | குழாய்க்கிணறு அமைத்தல் |
| C-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C-03 | கட்டட நிர்மாணமும் திருத்தமும் |

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1,000 (வரிகள் நீங்கலாக) அறவிடப்படும்.

விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2022" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் "தவிசாளர், தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 2021.12.31 வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-228-5761 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

(C-3180)

# கொவிட் தொற்று கட்டுப்படுத்திய முதல் ஐந்து நாடுகளுள் இலங்கை உள்ளடக்கம்

(கொழும்பு)

கொவிட் தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்திய முதல் 5 நாடுகளுக்குள் இலங்கையும் உள்ளடங்குவதாக இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்டிருந்த பிராந்திய நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இது எமது நாட்டுக்கு பெருமையாகும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அதேபோன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் சுமார் 3 இலட்சம் இலங்கையர்கள் தொழில் புரிவதாகவும், அதற்கும் மேலதிகமாக மேலும் பல இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதாகவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Scanned with CamScanner

## நியூஸிலாந்துடனான டெஸ்ட் தொடர்

# கிண்ணம் வென்றது இந்தியா

### அஸ்வின், ஜெயந்த் சுழல் ஜாலம்




நியூஸிலாந்து அணிக்கெதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில், இந்திய அணி 372 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் இந்தியக் கிரிக்கெட் அணி கைப்பற்றியுள்ளது.

இந்த வெற்றியானது இந்தியக் கிரிக்கெட் டெஸ்ட் வரலாற்றில் இந்திய அணி பதிவு செய்த மிகப்பெரிய ஓட்ட வெற்றியாகும்.

மும்பை வான்கடே மைதானத்தில் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 325 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 263 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 276 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதற்கமைய இந்தியக் கிரிக்கெட் அணி, நியூஸிலாந்து அணிக்கு 540 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதனைத்தொடர்ந்து 540 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 167 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்திய அணி 372 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் அஸ்வின், ஜெயந்த் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (4-6)

## லங்கா பிறீமியர் லீக்

# நடப்பு சம்பியனை வீழ்த்தியது காலி க்ளாடியேட்டர்ஸ்

கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற லங்கா பிறீமியர் லீக்கின் 2ஆவது அத்தியாயத்தின் ஆரம்பப் போட்டியில் நடப்பு சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணியை 54 ஓட்டங்களால் காலி க்ளாடியேட்டர்ஸ் அணி வெற்றி கொண்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காலி க்ளாடியேட்டர்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது.

ஆரம்ப வீரர்களாக களம் இறங்கிய தனுஷ்க குணதிலக்க (08), குசல் மெண்டிஸ் (16) ஆகிய இருவரும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கவில்லை. அவர்களைத் தொடர்ந்து 41 வயதான மூத்த வீரர் மொஹமட் ஹபீஸ்ம் (15) குறைந்த ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மூத்த வீரர் 34 வயதுடைய பென் டன்க் அணித் தலைவர் பானுக்க ராஜபக்ஷ ஆகிய இருவரும் அணியைப் பலப்படுத்தினர்.

பானுக்க ராஜபக்ஷ 6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்களையும் சமித் பட்டேல் 6 பவுண்டரிகளுடன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜப்னா கிங்ஸ் பந்துவீச்சில் ஜேடன் சீல்ஸ் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வனிந்து ஹசரங்க டி சில்வா 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

165 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜப்னா கிங்ஸ் 18.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

வஹாப் ரியாஸ் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார்.

உபுல் தரங்க (17), சம்மு அஷான் (15), அணித் தலைவர் திசர பெரேரா (11) உள்ளிட்ட முன்னணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

காலி க்ளாடியேட்டர்ஸ் பந்துவீச்சில் சமித் பட்டேல் 21 ஓட்டங்களுக்கு 3, மொஹமட் ஹபீஸ் 11 ஓட்டங்களுக்கு 2, புலின தரங்க 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகன் விருது சமித் பட்டேலுக்கு வழங்கப்பட்டது. (4-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

# இராசிபலன்

07.12.2021
கார்த்திகை 21, செவ்வாய்க்கிழமை
திருதியை காலை 7.17 மணிவரை
சதுர்த்தி பின்னிரவு 5.19 மணிவரை
பூராடம் காலை 7.06 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 5.50 மணிவரை
சுபநேரம் 10.47-12.17 மணிவரை
இராகுகாலம் 3.17-4.47 மணிவரை
சந்திராஷ்டமம்-மிருகசீரிடம் சதுர்த்தி விரதம்

வளவன்


மேஷம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.


மிதுனம்


மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் கூடும்.


கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


சிம்மம்

இல்லத்திலும், உள்ளத்திலும் அமைதி கூடும், உடல் நலன் சீராகும், போட்டிக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


கன்னி

தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபசெய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.


துலாம்

நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபவிரயங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள், செய் தொழிலில் பொறுப்புக்கள் அதிகரிக்கலாம், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.


கும்பம்


சிறிய வேலையொன்றிற்காக பல முறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நட்பு வட்டம் விரிவடையும்.

அமைதியிலே உனது அறிவு புதிய வேர்களை விடும்

# பிரியந்தவின் படுகொலையை கண்டித்து பௌத்த அமைப்புகள் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் முன்பாக பல்வேறு பௌத்த அமைப்புகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

பாகிஸ்தான் நாட்டில் எரித்து, படுகொலை செய்யப்பட்ட பொறியியலாளர் பிரியந்த குமாரவின் கொலையைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5)

# முதலீட்டுச் சபை உறுப்பினர்களின் இராஜினாமாக்களை ஏற்க மறுப்பு

(கொழும்பு)

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் சபை உறுப்பினர்களின் இராஜினாமாக்களை ஏற்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை முதலீட்டுச் சபை, கடந்த வாரம் ஒப்படைக்கப்பட்ட இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதி ஏற்க மறுத்து விட்டார் என்பதை அறிவிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் அந்தந்த வாரிய உறுப்பினர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்பட்ட கடிதத்தில்,

நாட்டின் நலனுக்காக வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் கொவிட் தொற்றுக்குப் பின்னரான பொருளாதார மாற்றத்திற்கு உதவுவதற்கும் அவர்கள் திறம்பட பங்களிப்பதால் அவர்கள் தொடர்ந்து சேவைகளை வழங்குவதை ஜனாதிபதி விரும்புவதாக ஜனாதிபதி செயலாளர் பி.பி.ஜயசுந்தர சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)


# துயர் பகிர்கின்றோம்

## திரு.விநாசித்தம்பி சேதுநாயகம்

(இளைப்பாறிய கிராம சேவையாளரும், சமாதான நீதவானும்)



ஆண்டவன் அடியில் 12 . 01 . 1935



இறைவன் நிழலில் 01 . 12 . 2021

புலோலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **விநாசித்தம்பி சேதுநாயகம்** அவர்கள் 01.12.2021 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி மங்கையர்க்கரசி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், சின்னையா இலட்சுமிப்பிள்ளையின் மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி, காலஞ்சென்ற கணேசராசா, அருந்தவராசா, காலஞ்சென்ற இரவீந்திரராசா, காந்தராசா, செல்வராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செல்வநாயகி, வல்லிபுரம், ஜெயராசா, சந்திரநாயகம், நவமணிதேவி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராசலட்சுமி, தவமணி, தனலக்சுமி, காலஞ்சென்ற சண்முகநாதன், பரமகுரு, துவாரகாதேவி, பரமதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகுமாரன், செல்வநிதி, ஞானேஸ்வரி (ராணி), தெய்வேந்திரன், இராசேந்திரன், சரோஜினி, கணேந்திரன், சசிரேகா, துவாரகா ஆகியோரின் மாமனாரும், முரளி, சதீஸ், சியாமிளா, சுபாங்கினி, பிரவினா, பிரதீபா ஆகியோரின் பெரியப்பாவும், நிசாந், பிரியங்கா, நிருசாந், நிரோஜினி, விநோத், சரணியா, துளசி, மயூரன், ஷாண், சஞ்சீவ் ஆகியோரின் பாசமிக்க பேரனும், வினுஷன், கவிஷா ஆகியோரின் அன்பான பூட்டனுமாவார்.

**அன்னாரின் இழப்பை ஒட்டி ஆறுதல் வார்த்தைகளை பகிர்ந்த அன்பு உள்ளங்களுக்கும், தேவை அறிந்து பசி போக்க உதவிய நேசங்களுக்கும், ஈமக்கிரியை உட்பட தொடர்ந்து இடம்பெற்ற ஆச்சாரங்களை செவ்வனே நிறைவு செய்ய உதவிய நித்திய உறவுகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.**

குடும்பத்தினர்.

தகவல்.
முத்துராஜா புரொடக்ஷன்
தும்பளை.

(8953)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Scanned with CamScanner

# ஆரியகுளத்தை பார்வையிடுவதில் பொதுமக்கள் அதிக ஆர்வம்

(யாழ்ப்பாணம்)



ஈழத்தமிழர்களின் மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் யாழ். மாநகரசபைக்குட்பட்ட (புனரமைக்கப்பட்ட) ஆரிய குளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. இந்நிலையில் தற்போது ஆரிய குளத்தினைப் பார்வையிடவும், அங்கு இடம்பெறும் வேடிக்கை நிகழ்வுகளைக் கண்டு களிக்கவும் தினமும் பொதுமக்கள் ஆர்வத்துடன் வருகின்றனர். குறிப்பாக விடுமுறை நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் ஏராளமானோர் தமது குழந்தைகள், சிறுவர்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. (4-5-18)


# மாதகல் பகுதியில் 276 கிலோ கேரளா கஞ்சா மீட்பு - இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் 276 கிலோ கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போது மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவர் கஞ்சா கடத்தி வந்த வேளை இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அவர்களிமிருந்து டிங்கி படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவரும் 37 மற்றும் 25 வயது உடையவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.



கடற்படையினரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் இளவாலை பொலிஸாரிடம் கையளிக்கப்படவுள்ளனர். (4-5-33-104)



கருகம்பனை தமிழ்மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம், விதையனைத்தும் விருட்சமே குழுமம் ஆகிய பொது அமைப்புக்கள் இணைந்து தெல்லிப்பழை மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவு அனுசரணையுடன் நடத்திய 23 ஆவது இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)

# கொவிட் தடுப்பூசி ஏற்றல்

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி பிரதேசத்தில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டம் வாராந்தம் திங்கள், புதன் கிழமைகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெறும்.

அத்துடன் 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சினோபார்ம் முதலாவது, இரண்டாவது டோஸ் ஏற்றும் வேலைத்திட்டம் வாராந்தம் வெள்ளிக்கிழமை தோறும் காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம் பெறும் எனவும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (4-5-60)

# திறன் வகுப்பறை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியின் திறன் வகுப்பறை திறப்பு விழா இன்று 7ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் ந. தயாளன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொள் வதற்கான Zoom இல. 5756862654 கடவுச் சொல் 2021 ஆகும். (4-5)

# பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் விசாரணைக்கு அழைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் இருந்து விசாரணைக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்பு பிரிவு மற்றும் விசாரணைப் பிரிவு-01 இனால் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு வாக்கு மூலம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக இன்று கொழும்பு-05இல் உள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு நிலைய பொறுப்பதிகாரியை சந்திக்குமாறு குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-30)



இலங்கை - USAID மிஷன் பணிப்பாளர் Reed Aeschliman இனால், நேற்று யாழில் தொழில் பயிற்சி அதிகார சபையின் தலைவர் எரங்க பஸ்நாயக்கவிடம் தொழில் பேருந்து ஒன்றிற்கான அடையாளச் சாவி கையளித்து வைக்கப்பட்டது.

நாடு தழுவிய பயணத்தில், சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் (USAID) ஆதரவுடன் செம் மையாக்கப்பட்ட VTA வின் தொழில் பேருந்து ஆனது, உலகத் தரம் வாய்ந்த தொழில்முறை,தொழில் சோதனைமற்றும் வழிகாட்டுதலை வழங்குவதற்காக இலங்கையின் தேவேந்திர முனை முதல் பருத்தித்துறை வரை ஆறு மாவட்டங்களில் உள்ள 21 பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 2,600 இளைஞர் யுவதிகளிடம் சென்றடைந்துள்ளது. (படம்- சிவசாந்தன், கஜிந்தன்)



வடக்கு மாகாண கட்டடத் திணைக்களத் தின் பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சுந்தரகுமா ரின் மணி விழா கடந்த 4 ஆம் திகதி புத்தூர் தின்னை விடுதி யில் நடைபெற்றது.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 21 ¼ செவ் 11 சூரி 12 இல் உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: B.Com 3 ஆம் வெளிக்கள உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்த தனியார் அல்லது அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12179 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 54½ செவ். சூரி 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு: வங்கியாளர், பொறியியலாளர் வெளிநாடு கனடா மட்டும்<br>தொ.இ:G/12047 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 12 சூரி 11 இல் உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:HNDA இலங்கை பொலிஸ் உப பரிசோதகர்<br>எதிர்பார்ப்பு: பொருத்தமான பெண்<br>தொ.இ: B/12180 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 40¾ செவ் 5 சூரி 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டில் ஆசிரியர் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/12051 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 1 சூரி 2 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கனடா PR உண்டு இந்தியா வந்து திருமணம் செய்யலாம்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு வெளிநாட்டு பெண்<br>தொ.இ: B/12184 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 12 சூரி 2 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc Degree அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ:G/12058 |
| பிறப்பு: 1992 கத்தோலிக்கம்<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 12 சூரி 2 இல் உயரம்: 167 cm<br>தகைமை/தொழில்: BSc (Hons) Nursing<br>எதிர்பார்ப்பு: படித்த அரச, தனியார் உத்தியோகம் இந்து சமயத்தவரும் ஏற்றுக் கொள்ளப்படும்<br>தொ.இ: B/12185 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 1 சூரி 6 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/12060 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

# பிஸ்கட் உள்ளிட்ட இனிப்புப் பண்டங்களின் உற்பத்தியில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் பிஸ்கட் வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.எம்.டி.சூரியகுமார தெரிவித்தார்.

கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி 20 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

பிஸ்கட் உள்ளிட்ட இனிப்புப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மாதமொன்றுக்கு 12000 முதல் 15000 தொன் கோதுமை மா பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோதுமை மாவின் விலை அண்மைய நாட்களில் 41 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. இனி வரும் காலங்களில் விலை உயர்த்தப்பட்டால் பிஸ்கட், கேக் உள்ளிட்ட பண்டங்களின் விலைகளையும் அதிகரிக்க நேரிடும்.

அத்துடன் கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக உற்பத்தியைக் குறைக்க நேரிடும் எனவும், இதனால் பணியாளர்களுக்கு வருமான இழப்பு ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# அடிப்படை உரிமைகளை சுரண்டும் அரசியல்வாதிகள்

## தேர்தல் வெற்றியே அவர்களின் இலக்கு



(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளை சுரண்டுவதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்று இடம் பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், இந்தச் செயற்பாட்டை நிறுத்தாமல் அரசியல்வாதிகளால் முன்னோக்கிச் செல்ல முடியாது எனத் தெரிவித்தார். மேலும் தான் உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தேர்தலில் வெற்றிபெற மக்களிடம் தண்ணீர், வீதி மற்றும் மின்சாரம் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தருவதாக கூறியே வாக்கு கேட்பதாகவும் இவ்வாறு கேட்கும் யுகத்தை இல்லாமல் செய்தாலேயே புதியவர்களும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்றும் இதனை மாற்றுவதற்கு அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும உறுதியளித்தார். (நி-5)

# ஜனாஸா அடக்கத்திற்காக விவசாய காணிகள் அபகரிப்பு

## கிண்ணியா மக்கள் குற்றச்சாட்டு

(கிண்ணியா)

கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் வட்டமடு எனும் கிராமத்தில் விவசாயிகளின் காணிகள் கொரோனா மையவாடிக்கு அபகரிக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

15 வருடங்களுக்கும் மேலாக விவசாயச் செய்கையை மேற்கொண்டு வருகிறோம். கொரோனா ஜனாஸா என்ற போர்வையில் எங்கள் காணிகளை அடாத்தாக பிடித்துள்ளார்கள். இது விவசாயக் காணி. எங்களுக்கு முன்கூட்டியே இது தொடர்பாக அறிவிக்காமல் காணிகளை சுவீகரித்துள்ளனர்.

கொரோனா உடல்களை அடக்கம் செய்ய ஆரம்பியுங்கள் அல்லது எங்களை அடக்கம் செய்துவிடுங்கள் என விவசாயி ஒருவர் தனது ஆதங்கத்தையும் இதன் போது தெரிவித்தார்.

இக் காணியை அண்மித்த பகுதியில் குளம் உள்ளது. ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான இடம் இதுவல்ல, உகந்ததல்ல எனவும், மாரி காலங்களில் நீர் கசிவு ஏற்படும் எனவும் காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களது காணிக்குப் பதிலாக மாற்று காணி தருவதாக கூறியும் இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது விவசாயச் செய்கை செய்யும் காலம். இக் காணி சுவீகரிப்பினால் நிலத்தை அடாத்தாக பிடித்து அரச காணி என்ற போர்வையில் வாழ்வாதாரத்தை பாதிக்கச் செய்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி எங்களது காணியை மீட்டுத் தாருங்கள் எனக் கோரிக்கை விடுத்தனர். (நி-5)

# வடமாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தல்

2021.12.01ம் திகதியிடப்பட்டு www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் பத்திரிகைகள் மூலமும் வெளியிடப்பட்ட மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கு அமைய மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க விரும்பும் அலுவலர்களுக்கான மாவட்ட ரீதியான சேவை, 2021 டிசெம்பர் மாதத்தில் பின்வரும் அட்டவணைக்கமைய நடைபெறும்.

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 08.12.2021 | 10.00-2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு |
| 15.12.2021 | 10.00-2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா |
| 22.12.2021 | 10.00-2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் |
| 29.12.2021 | 10.00-2.00 | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி. |

2021 டிசெம்பர் மாதத்துக்குள் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மேன்முறையீடுகளை, இல. 393/48, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாணப் பொதுச்சேவை அலுவலகத்தில் திங்கட்கிழமைகளில் கையளிக்க முடியும்.

2013.07.03ம் திகதியில் வெளியிடப்பட்ட 1817/30 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக் கோவையின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கமைவாக மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சி.திருவாகரன், செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## சந்தை, இறைச்சிக்கடைக்கான 01.01.2022-31.12.2022 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்- 2022

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-07.12.2021 இல் இருந்து 20.12.2021ஆம் திகதி 3.00 மணி வரை

02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-21.12.2021 காலை 10.00 மணி வரை

03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-21.12.2021 காலை 10.30 மணிக்கு.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 27.10.2021 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல், பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ.இல | குத்தகை விபரம் | 2022ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 1 | உடுப்பிட்டி சந்தை | 1,175,842.50 | 11,758.43 | 500.00 | - |
| 2 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,716,855.00 | 17,168.55 | 500.00 | 100.00 |
| 3 | மண்டான் சந்தை | 49,611.45 | 496.11 | 500.00 | - |
| 4 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 955,606.05 | 9,556.06 | 500.00 | 100.00 |

க.த.ஐங்கரன், தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
07.12.2021

(C-3177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றின் மூலமும் ஓமிக்ரோன் பரவ வாய்ப்பு

## பிரித்தானிய அறிவியலாளர்கள் கணிப்பு

**(லண்டன்)**

**ஓமிக்ரோன் வைரஸ் காற்றின் மூலம் பெருமளவில் பரவக்கூடும் என பிரித்தானிய அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

பிரித்தானிய அரசின் அவசர கால அறிவியல் ஆலோசனைக் குழுவின் சமீபத்திய கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களிலேயே இவ்வாறு தெரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

ஓமிக்ரோன் வைரஸ் தொற்றின் அறிகுறிகள் மற்றும் பல்வேறு விடயங்கள் இன்னமும் முழுமையாக கண்டுபிடிக்கப்படவில்லை. உலக சுகாதார அமைப்பு. ஓமிக்ரோன் வைரஸ் கவனம் செலுத்த வேண்டிய ஒரு வைரஸ் தான் என்று கூறுகிறது.

ஆனால் தென்னாபிரிக்க மருத்துவர்கள், இதுவரை இவ்வகை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் கூட உயிரிழக்கவில்லை என்றும் கூறியுள்ளார்கள். எனவே இந்த வைரஸ் குறித்து பல விடயங்கள் இன்னமும் சரியாக தெரியாத நிலையில், அறிவியலாளர்கள் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வகையில், ஆய்வு மேற்கொண்ட பிரித்தானிய அறிவியலாளர்கள், ஓமிக்ரோன் வைரஸ், காற்றின் மூலம் பெருமளவில் பரவக்கூடும்' என தெரிவித்துள்ளார்கள். ஆனாலும் இந்த முடிவுகள் ஆரம்பகட்ட முடிவுகளே என்றும் இந்தத் தகவலை உறுதி செய்ய இன்னமும் பல ஆய்வுகள் தேவைப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## ஆங்சான் சூகிக்கு 4 ஆண்டு சிறைத்தண்டனை



(மியன்மார்)

மியன்மார் முன்னாள் தலைவர் ஆங்சான் சூகிக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

கருத்து வேறுபாடுகளைத் தூண்டுதல் மற்றும் கொவிட் விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் அவர் குற்றவாளியாகக் இனங்காணப்பட்டுள்ளார். 76 வயதான அவர் பெப்ரவரியில் இராணுவப் புரட்சி மூலம் வெளியேற்றப்படுவதற்கு முன்பு, தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு தலைமை தாங்கினார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்காளர் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனையடுத்து, ஆங்சான் சூகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதுடன், பல ஊழல் குற்றச்சாட்டுகள், உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தை மீறுதல் மற்றும் பொது அமைதியின்மையை தூண்டுதல் உட்பட பல குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது.

அவர் மீதான 11 குற்றச் சாட்டுக்களில் ஒரு குற்றச்சாட்டில் 4 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## "பாரிய சவால்களை ஒன்றிணைந்து முறியடிக்கலாம்" கொரோனா வைரஸ் நமக்கு உணர்த்திய பாடம் இது



(எதென்ஸ்)

புலம் பெயர்ந்தோர் விடயத்தில் "குறுகிய சுயநலம் மற்றும் தேசியவாதத்தை" ஐரோப்பிய நாடுகள் கடைப்பிடித்து வருவதாக போப்பாண்டவர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கிரேக்க நாட்டு லெஸ்போஸ் தீவின் புலம்பெயர்ந்தோர் மையத்துக்கு நேற்று முன்தினம் சென்று அங்குள்ள அகதிகளை சந்தித்துப் பேசும்போதே போப் பிரான்சிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

ஐரோப்பாவை அடைய முயற்சிக்கும் அகதிகளுக்கு இது ஒரு முக்கிய நுழைவாயிலாக இருந்து வருகிறது. ஐரோப்பாவுக்கு நுழைய முயன்ற அகதிகள் பலர் இங்குள்ள முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே உள்ள கால்வாய் ஊடாக இங்கிலாந்தை அடைய முயன்ற அகதிகள் 27 பேர் படகு கவிழ்ந்து உயிரிழந்தனர்.

அத்துடன், எல்லை கடந்து இங்கிலாந்துக்குள் நுழைவோர் மற்றும் நுழைய முயற்சிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு இது வரை 26,000 பேர் அகதிகளாக இங்கிலாந்துக்குள் நுழைந்துள்ளனர். இது கடந்த ஆண்டை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

இதேவேளை, பெலாரஸில் இருந்து போலந்திற்குள் நுழைய முயற்சித்த அகதிகள் பலர் கடும் குளிரில் சிக்கி இறந்துள்ளனர். அகதிகள் விவகாரங்களை தமக்குப் பொருந்தாத விடயமாக சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

குறுகிய சுயநலமும் தேசியவாதமும்பேரழிவுகரமான விளைவுகளுக்கு வழி வகுக்கும் என்பதை வரலாறு நமக்குக் கற்பிக்கிறது.பாரிய சவால்களை உலகம் ஒன்றிணைந்தே எதிர்கொள்ள வேண்டும் என்பதை கொரோனா வைரஸ் தொற்று நோய் எமக்கு உணர்த்தியுள்ளது. எனினும் அகதிகளுக்கான அணுகு முறையில் மாற்றங்களைக் காண முடியவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## மக்கள் சேவைக்காய் தன்னை அர்ப்பணித்தவர்

### அமரர்.வேலுப்பிள்ளை சிவயோகன்



**மறைந்தார் மாண்பு**

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளருமான அமரர்.வேலுப்பிள்ளை சிவயோகனின் 31 ஆம் நாள் நினைவு இன்றாகும். அதனை யொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

பல கோடி மனிதர்கள் பிறந்து, வாழ்ந்து மறைகிறார்கள். எல்லோருடைய வாழ்க்கையும் காலத்தைக் கடந்து நிற்பதில்லை. அந்த வாழ்க்கை அவரவர் குடும்பச் சூழலைக் கடந்து கொண்டாடப்படுவதுமில்லை, நினைவு கொள்ளப்படுவதுமில்லை. சிலருக்கு குடும்பச் சூழலில் மூன்று நான்கு தலைமுறைகளைக் கடந்து நினைவு கொள்ளல் இருக்கக் கூடும். ஆனால் அதுவும் தொடர்வது குறைவு. அபூர்வமாக அப்படித் தொடர்ந்தாலும் அடுத்தடுத்த தலைமுறைகளில் நின்று பிடிப்பதில்லை.

இதை மீறி காலத்தைக் கடந்து குடும்பச் சூழல், சமூகச் சூழல் போன்றவற்றைக் கடந்தும் நிற்கக் கூடிய மனிதர்களும் அவர்களுடைய வாழ்க்கையும் பெறுமதி கூடியது. அத்தகைய ஒரு வாழ்க்கைத் தகுதியையும் சிறப்பையும் பெற்றவர் பொறியியலாளர் அமரர்.வேலுப்பிள்ளை சிவயோகன். தன்னுடைய சிந்தனையினாலும் செயற்றிறனின் வழியாகவும் இந்த இடத்தை அவர் பெற்றிருக்கிறார்.

பல கோடி நட்சத்திரங்களிலிருந்து தனித்துத் தெரியும் நட்சத்திரம் போன்றது இது. பல கோடி மனிதர்களிலிருந்து ஒரு மனிதர் எப்படி தனித்துத் தெரிகிறார்? தனித்து என்றால் தனியாக விலகி நிற்றல் என்று இல்லை. தனித்துவமாக இருத்தல் என்றே பொருள். இதற்கு அவர் தன்னை உருவாக்கிக் கொள்ளும் விதமே அவரைத் தனித்துத் தெரிய வைக்கிறது. இந்தத்தனித்துத் தெரிதலே தனித்துவமாகிறது. இந்தத் தனித்துவமே தனி அடையாளமாகிறது. இந்தத் தனி அடையாளமே அந்த மனிதரை வரலாற்றில் நிறுத்துகிறது.

சிவயோகன் அப்படித்தான். தன்னுடைய எல்லைகளை அவர் விரித்துச் செயற்பட்டார். முக்கியமாக அவர் ஒரு பொறித்துறையாளர் என்ற வகையில் அந்தத் துறையில் செய்ய வேண்டியவற்றையும் செய்யக் கூடியவற்றையும் செயற்படுத்தினார். அவர் வேலை செய்த முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இதனை நடைமுறைப்படுத்தினார். முக்கியமாக இந்த மாவட்டங்களில் போரிடர் காலத்தில் வீதி அபிவிருத்தித் துறையில் பணியாற்றுவதென்பது மிகச் சவாலானது மட்டுமல்ல, எப்படி அது சாத்தியம் என வியந்து பார்க்கக் கூடியதுமாகும்.

தூர நோக்குடன் சிந்திப்போர் அதிலிருந்து பின்வாங்குவதில்லை. அவர்களுடைய தொலை நோக்குக்குக் காலம் பிந்தியே பரிசு கிடைக்கும். அந்தப் பரிசு பெறுமதியானது. சிவயோகன் நம்மை விட்டு எங்கும் சென்று விட்டதாக எண்ண முடியவில்லை. அவருடைய சிந்தனைகள் நம்முடன் அல்லவா உள்ளன.

**கவிஞர் கருணாகரன்**
**கிளிநொச்சி.**

## திருமணத்தில் பங்கேற்க சென்ற பேருந்து ஆற்றில் கவிழ்ந்து 31 பேர் பலி

# கென்யாவில் சோகம்

(நைரோபி)

திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க சென்ற பேருந்து விபத்தில் சிக்கி 31 பேர் பலியானது கென்யாவில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கென்யா நாட்டில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதால் அங்குள்ள ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது.

இந்நிலையில், தலைநகர் நைரோபியில் இருந்து 200 கி.மீ. தொலைவில் ஒரு திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பாடகர் குழுவினர் ஒரு பேருந்தில் கடந்த சனிக்கிழமை சென்றனர்.

அங்கு ஆற்றின் பாலத்தின் மீது வேகமாக ஓடிய வெள்ள நீரை பேருந்து கடந்து செல்ல முயற்சித்தது. அப்போது அந்த பஸ் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு ஆற்றில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 31 பேர் பலியானதாகவும் 12 பேர் மட்டுமே பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் எனவும் மீட்புக்குழுவினர் தெரிவித்தனர். (நி-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

# எதிர்காலத்தில் தோன்றும் தொற்று நோய்கள் கொரோனாவைவிட மோசமானதாக இருக்கும்

## சாரா கில்பேட் எச்சரிக்கை



(லண்டன்)

கொரோனாவை விட, எதிர்காலத்தில் தோன்றும் தொற்று நோய்கள் மிக ஆபத்தானதாக இருக்கக்கூடும் என ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை உருவாக்கியவர்களில் ஒருவரான சாரா கில்பேட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் சீனாவின் வுஹான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ், இன்று வரை உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது.

இந்நிலையில், எதிர்காலத்தில் தோன்றும் தொற்று நோயின் தன்மை குறித்து அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு வைரஸ் நமது உயிர் மற்றும் வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவது இதுவே கடைசியாக இருக்காது.

உண்மை என்னவென்றால், அடுத்து தோன்றும் தொற்றுநோய் கொரோனவை விட மிக ஆபத்தானதாக இருக்கும்.

அது மிகவும் தீவிரமாக தொற்றக்கூடியதாக அல்லது உயிருக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதாக அல்லது இரண்டையுமே கொண்டதாக இருக்கக்கூடும்.


அனைவரும் கடந்து வந்த சூழ்நிலைக்கு மீண்டும் திரும்புவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. நாம் மிகப்பெரிய அளவில் பொருளாதார இழப்புகளை சந்தித்துள்ளோம்.

தொற்றுநோய்க்கு எதிராக நாம் அடைந்த முன்னேற்றங்கள் மற்றும் நாம் பெற்ற அறிவை இழந்து விடக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (ரி-5)



வவுனியாவில் பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றிவரும் 20 பேர் கண்டியில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஸ்ரீலங்கா சமூக நலன் செயற்பாடுகள் அபிவிருத்தி இயக்கம் கண்டி ஸ்ரீபுஸ்பதான மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில் மனித உரிமைகளுக்கான சமாதானத் தூதுவர் அமைப்பின் ஏற்பாட்டில் சமூக சேவையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (படம்:சதீஷ்)

# இடியன் துப்பாக்கியுடன் இரண்டு பேர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய உமையாள்புரம் பகுதியில் இடியன் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (4-5-316)

# அதிகரித்த கசிப்பு உற்பத்தி கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(அக்கராயன்)

புதுக்குடியிருப்பு மூங்கிலாற்றுப் பகுதியில் அதிகரித்த கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகள் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

கசிப்பு பாவனையால் மாலை மற்றும் இரவு நேரங்களில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு அதிகமான வன்முறைகள் இடம்பெறுகின்றன.

கிராம அபிவிருத்தி சங்கத்திடம் இவற்றினை பல முறை பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்ததன் ஊடாக கிராம அபிவிருத்தி சங்கம் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோரை அழைத்து தனியாக ஒரு சந்திப்பை நடத்தி இனிமேல் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென கூறியதுடன் கிராமம் முழுவதும் பொதுவான அறிவித்தலையும் விடுத்தனர்.

இதன் விளைவாக கசிப்பு உற்பத்தி செய்வோர் குறைவடைந்தாலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தே செல்கின்றன.

இந்த சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (4-5-350)

# பரந்தனில் விபத்து இருவர் படுகாயம்



(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஏ-9 வீதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பான விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-4-100-316-350)

# நவம்பர் மாதத்தில் மட்டும் வவுனியாவில் 855 பேருக்கு கொவிட்

## ஐவர் உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 885 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 5 பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் மீண்டும் இனங்காணப்பட்டு வருகின்றனர். குறிப்பாக நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 30 ஆம் திகதி வரை கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 885 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், 5 பேர் கொரோனாத் தொற்றினால் மரணமடைந்துள்ளனர்.

தேவையற்ற விதத்தில் வீட்டில் இருந்து வெளியில் வருவதனை இயன்றளவு தவிர்க்கும் போது நோய்ப் பரம்பலை கட்டுப்படுத்த முடியும்.

இதற்கு அனைவரும் பொறுப்புணர்வு டன் செயற்பட வேண்டும் என வும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (4-5-299)



விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் வன்னி அரசின் தந்தை "சமூக நீதிப் போராளி அய்யா இரத்தினசாமி" யின் நினைவுப்பகிர்வு நிகழ்வு நேற்று முன்தினம் தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், தமிழ்நாட்டின் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் தி.வேல்முருகன், நக்கீரன் பத்திரிகையின் ஆசிரியர் நக்கீரன் கோபால், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி ஆகியோருடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் கலந்து கொண்டார். (படம்: தேவானந்தன்)

# மதுவரித் திணைக்களத்தால் இதுவரை 190 வழக்குகள் பதிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் மாவட்ட மதுவரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 190 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை என்பன அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது. இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸார் மற்றும் மதுவரித்திணைக்கள அதிகாரிகள் தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகள் மேற்கொண்டு பலரை கைது செய்து வழக்குகளை பதிவு செய்துள்ளனர். அந்த அடிப்படையிலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இன்று வரை மதுவரித் திணை க்களத்தினால் 190 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

# இஸ்லாமிய தீவிரவாதம் காட்டுமிராண்டித்தனமானது

## ஞானசார தேரர்

(கொழும்பு)

இஸ்லாமிய தீவிரவாதம் தற்போது உலகில் உள்ள வேறு எந்த வகை தீவிர வாதத்தையும் விட பயங்கர மானதாகவும், காட்டுமிரா ண்டித்தனமாகவும் மாறி யுள்ளது என ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செய லணியின் தலைவர் ஞான சார தேரர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தானின் சியல்கோட் பகுதியில் பிரியந்த குமார ஒரு கும்பலால் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவத்தை கருத்திற்கொண்டு இலங் கையில் வளர்ந்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மதத் தீவிரவாதம் மட்டும ல்ல, எந்த வகையான தீவிர வாதத்தின் விளைவுகளும் பேரழிவை ஏற்படுத்தும்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவு, கலாசாரம், நாகரிகம், கலை, தத்துவம் உள்ளிட்ட மனிதனின் அனைத்துச் சாதனைகளின் மதிப்புகளையும் இது இடை விடாமல் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

ஆகவே தற்போது உலகை ஆட்டிப்படைத்து வரும் இஸ்லாமிய தீவிரவா தத்தின் உண்மைத் தன் மையைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என் றும் இலங்கையிலும் அதிக ரித்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்றும் ஞான சார தேரர் தெரிவித்தார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## செல்வம் தரும் லட்சுமி குபேர வழிபாடு



சிவபெருமானின் உற்ற தோழ ரான குபேரனுக்கு என்று ஒரு மந் திர சதுக்கம் உண்டு. எந்தப்பக்கம் கூட்டினாலும் 72 வரும். இந்த சது ரம் குபேரனுக்கு உரியதாக நெடுங் காலமாக வழிபட்டு வருகிறது.

வியாழக்கிழமை மற்றும் பூரம் நட்சத்திரம் கூடிய நாளில் இந்த குபேர சக்கரத்தை அல்லது எந்திர த்தை பிரதிஷ்டை செய்வது நல்லது.

### பூஜை செய்வது எப்படி?

வாரத்தில் வெள்ளிக்கிழமை அமி ர்தயோகம் அல்லது சித்தயோகம் உள்ள தினத்தில், இந்த விரதத்தை தொடங்கலாம். விரதம் இருப்பவர் கள் விரதம் கடைப்பிடிக்கும் தினத் துக்கு முதல் நாளே, பூஜை பொருட் களை தயார் செய்து கொள்ள வேண் டும். லட்சுமி படம், குபேரன் படம், குபேர எந்திரம் ஆகியவற்றை எடு த்து சுத்தம் செய்து கொள்ள வேண் டும். வெள்ளிக்கிழமைகளில் குளித்து விட்டு, நெற்றியில் பொட்டு வைத்து கொள்ள வேண்டும்.

தேங்காய், வெற்றிலை பாக்கு, சந்தனம், பழம், பூ, சாம்பிராணி, கற்பூரம், நவதானியம், தலைவாழை இலை ஆகியவற்றை தயாராக வைத் துக் கொள்ள வேண்டும். நல்ல நேரத் தில் லட்சுமி, குபேரன், குபேர எந்தி ரத்துக்கு மஞ்சள், குங்குமம் வைத்து பூஜையில் வடக்கு திசையில் வைக்க வேண்டும்.

தலைவாழை இலையில் நவதா னியத்தை ஒன்றாக கலக்காமல் சுற்றி வர பரப்பி வைக்க வேண்டும். அதன் நடுவில் ஒரு செம்பை வைத்து அதில் சுத்தமான தண்ணீரால் நிரப்பி அதில் கொஞ்சம் மஞ்சள் தூளைப்போட்டு வைக்க வேண்டும். செம்பின் மேலே மஞ்சள் பூசின தேங்காயை வைத்து சுற்றிலும் மாவிலையை சொருகி கலசம் மாதிரி அமைக்க வேண்டும். வெற்றிலை, பாக்கு, பழம், தட்சணை வைக்க வேண்டும். மஞ்சள் தூள் எடுத்து சிறிது தண்ணீர் விட்டு பிள் ளையார் பிடித்து, வாழை இலை யின் வலது பக்கம் வைத்து குங்குமப் பொட்டு வைக்க வேண்டும். படம், எந்திரம், கலசம், மஞ்சள் பிள்ளை யார் ஆகியவற்றுக்கு பூக்களை போட்டு ஊதுவர்த்தி ஏற்றி வைக்க வேண்டும்.

கிழக்கு திசையில் அமர்ந்து விநாயகர் மந்திரம், சுலோகங்களை கூறி, லட்சுமி சுலோகம், குபேரன் சுலோகம், துதி ஆகியவற்றை கூற வேண்டும். மனதில் கணபதி, லட் சுமி, குபேரனின் திருநாமங்களுடன் போற்றி குபேரனின் மூல மந்திரங் களை சேர்த்து கூற வேண்டும். பின்பு தூப தீபம் காட்டி வாழைப்பழம், பசும்பால், பாயசம் போன்றவற்றை நிவேதனம் செய்ய வேண்டும். வெற் றிலை, பாக்கு, பழத்தை சுமங்கலிக ளுக்கும், தட்சணையை ஏழைகளுக் குக் கொடுக்க வேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## மேலும் 1.34 மில். பைசர் தடுப்பூசிகள் நாட்டிற்கு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பைசர் தடுப்பூசியின் மேலும் 1.34 மில்லியன் டோஸ்கள் நாட்டை வந்தடைந்தன.

விமான நிலையத்தை வந்தடைந்த தடுப்பூசிகள், கொழும்பில் அமைந்துள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் களஞ்சியசாலைக்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டன. (நி-5)

## மூன்றாவது தடுப்பூசி பெற்றோர் தொகை 950,000 ஐக் கடந்தது

(கொழும்பு)

நாட்டில் மூன்றாவது கொவிட்-19 தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 950,000 ஐ கடந்து ள்ளது.

இதுவரை 956,946 பேர் கொவிட்-19 மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக் கொண்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

## நீரில் மூழ்கி ஒருவர் பலி; தாயும் குழந்தையும் மாயம்

(கொழும்பு)

பேராதனை, களுகமுவ பிரதேசத்தில் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற ஐவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

இவர்களுள் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 20 வயதுடைய பெண்ணும் 2 வயது குழந்தையும் காணாமல் போயுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளுமே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 380 | 400 | 400 | 360 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 550 | 600 | 400 | 500 |
| தக்காளி | 600 | 500 | 400 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 350 | 350 | 400 | 400 |
| கரட் | 280 | 360 | 400 | 400 |
| பூசணி | 60 | 50 | 60 | 80 |
| புடோல் | 250 | 200 | 250 | 280 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 600 | 550 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 450 | 500 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 320 | 400 | 400 |
| பீற்றூட் | 160 | 140 | 160 | 300 |
| கறிமிளகாய் | -- | 500 | 800 | 500 |
| முருங்கைக்காய் | -- | 800 | -- | 800 |
| போஞ்சி | 350 | 340 | 360 | 360 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 400 | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | -- | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 500 | -- | 400 |
| முள்ளங்கி | 140 | 140 | -- | 280 |
| பொன்னாங்காணி | 50 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 25 | 250 | 20 | 30 |
| சரப்பலா | 80 | 120 | -- | 120 |

Scanned with CamScanner

# இலங்கையின் செயற்பாடுகள் குறித்து கடும் அதிருப்தியில் இந்தியா

## தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட சில முக்கிய உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

அண்மையில் இரண்டு நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

இந்த விஜயத்தின் போது இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட சில முக்கிய உடன்படிக்கைகள் கைவிடப்பட்டுள்ளதாக இந்தியா அதிருப்தி வெளியிட்டுள்ளதாக இலங்கையின் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் நடைமுறைப்படுத்துவதாக இணங்கப்பட்ட மூன்று முக்கிய உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகம், யுகதனவி மின் உற்பத்தி நிலைய பங்கு விற்பனை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்பட்டதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி குறித்த ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இதேவேளை, நிதி அமைச்சரின் இந்திய விஜயம் வெற்றிகரமாக அமைந்தது என அரசாங்கத் தரப்பு தகவல்கள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தடுப்பூசி வழங்கலை கட்டாயமாக்குமாறு

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கோரிக்கை

**(கொழும்பு)**

**தடுப்பூசி வழங்கலைக் கட்டாயமாக்க வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அதன்படி, அதற்கான சட்டத்தைக் கொண்டு வருவதற்கான பணிகளை துரிதப்படுத்துமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

புதிய கொரோனா வைரஸ் திரிபான ஒமிக்ரோன் நாட்டில் கண்டறியப்பட்டதை அடுத்து இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதேநேரம், கொரோனா அறிகுறிகள் தென்படுமாயின் அது குறித்து மிகுந்த அவதானம் செலுத்துமாறும் அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். (நி-5)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பில்லை

## அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.

(கொழும்பு)

காலம் கடத்தாது சபையில் நடந்த சம்பவங்களை அவசர விடயமாகக் கருதி நீங்களே ஆராய்ந்து பார்த்து தீர்ப்பை வழங்குங்கள் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் நேற்று கோரிக்கை விடுத்தார்.

சபையில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது.

"பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லையெனில் அது பாரதூரமான விடயமாகும். எனவே, கடந்த வாரம் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் சி.சி.ரி.வி. காட்சிகள் உள்ளன. அவற்றை நீங்கள் ஆராய்ந்து பார்த்து தீர்வொன்றை எடுங்கள். அதற்கான பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

மாறாக விசாரணைக் குழுக்களை அமைத்தால் அது காலம் கடத்துவதாகவும் குழப்பங்களை விரிவுபடுத்துவதாகவுமே அமையும்" என அவர் தெரிவித்தார். (நி-5)



# இலங்கை போக்குவரத்து சபையில் அரசியல் தலையீடுகள் அதிகம்

(கொழும்பு)

அரசியல் தலையீடுகளை அதிகளவில் கண்டுகொள்ளக் கூடிய இடமாக இலங்கை போக்குவரத்து சபையை அடையாளப்படுத்த முடியும் எனவும் அரசாங்கங்கள் மாறியவுடன் பதவிகளும் அதிவேகமாக மாறுவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நடத்துநர் டிப்போ கண்காணிப்பாளராகவும், டயர் மாற்றிய தொழிலாளி டிப்போ பொறியாளராகவும் மாறுதல் போன்ற பதவிமாற்றங்கள் அரசாங்கம் மாறிய உடனேயே நடைபெறுகிறது.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இலங்கை போக்குவரத்து சபையில் காணப்படும் பாதகமான செயற்பாடுகள் மற்றும் ஒழுங்கற்ற பொறிமுறையை மாற்ற முடியாது எனவும் குறிப்பாக தகுதியற்றவர்கள் இலங்கை போக்குவரத்து சபையில் நியமனம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைத் தவிர்ப்பதற்காக, முறையான நடைமுறைக்கு அமைவாக இலங்கை போக்குவரத்து சபை பதவிகளுக்கு பொருத்தமானவர்களை மாத்திரம் நியமிக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## வேலை ஆக வேண்டுமா?

நம்மைச் சுற்றியிருப்பவர்களிடம் வேலை வாங்குவது என்பது ஒரு தனிக்கலை.

இக்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் மிகக் குறைவே. ஆனால் இதில் தேர்ந்தவர்கள் திறமைசாலிகள் என்று போற்றப்படுவதோடு மற்றவர்களின் விருப்பத்திற்கு உரியவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். தேர்ச்சி பெறாதவர்கள் மனக் கஷ்டத்தோடு உடலுழைப்பையும் வீணாக செலவழிக்கிறார்கள்.

இதில் தோல்வி காண்பவர்கள் பெரும்பாலும் தட்டிக்கொடுத்து வேலை வாங்குபவர்களாக இல்லாமல் அடித்துப் போட்டு வேலை வாங்குபவர்களாக இருப்பார்கள். இத்தகையவர்களிடத்தில் பணி புரிபவர்கள் அல்லது பழகுபவர்கள் விரைவில் இவர்கள் மீது சலிப்படைந்து விடுகிறார்கள். துருப்பிடித்த இயந்திரமாய் வீணாய் போகிறார்கள்.

இக்கலையில் வேதனையைக் குறைத்து சாதனையாளராக வேண்டுமானால் முதல் காரியமாக மூன்றாம் நபராக இருந்தால் அவர்களுக்கு உரிய மரியாதையை அளிக்க வேண்டும். அடுத்து உறவாக இருந்தால் அன்பைப் பொழிய வேண்டும்.

அன்பு அல்லது மரியாதை என்னும் மகுடிக்கு மயங்காத மனிதர்களை நீங்கள் காணவே முடியாது.

அடுத்ததாக எதற்கெடுத்தாலும் அவர்களைக் கோபித்துக் கொள்வது என்னும் கொடிய குணத்தை விட்டுவிட வேண்டும். நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் இறுதியில் திட்டுத்தான் மிச்சம் என்று அவர்கள் எண்ணத் தொடங்கி விட்டால் காரியம் கைகூடாது.

இதன்மூலமாக அவர்களுக்கு கோபம் தான் ஏற்படுமே தவிர தவறே செய்திருந்தாலும் அதை உணர மாட்டார்கள். தங்கள் குறைகளை அவர்கள் உணர ஒரே வழி இதமாக எடுத்துச் சொல்வது தான். மேலும் மனிதர்கள் குறைபாடு உடையவர்கள் என்பதை உணர்ந்து மன்னிக்க இயலாத குற்றங்களையும் மன்னிக்க வேண்டும்.

இதன்மூலம் இதயத்தில் நல்ல இடத்தைப் பெற முடிவதோடு மீண்டும் அத்தகைய தவறுகள் நேரா என்று எதிர்பார்க்கலாம்.

ஒவ்வொரு வேலையிலும் அவர்களுக்கு உரிய கஷ்டங்களை நாம் உணருவதாக இருந்தாலும் அதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அவர்கள் உணரும் வகையிலும் நடந்து கொள்ள வேண்டும்.

நமக்கு வேலை கொடுத்தவர்கள் நம் கஷ்டத்தை உணருகிறார் என்று சம்பந்தப்பட்டவர் அறிகிறாரல்லவா! அதில் அவருக்கு ஓர் அலாதி மகிழ்ச்சி. கொடுக்கப்பட்ட வேலை நிறைவேறும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அப்படி நாம் நடந்து கொண்டால் கடுமையான வேலை கூட கடுமையாய் தெரியாது. கடமையாய்த் தெரியும்.

அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையின் மூலமாக வெளிப்படும் திறமையை அங்கீகரிக்கவோ பலர் முன் பாராட்டவோ சிறுதும் தயங்கக் கூடாது. அவர்கள் விரும்புகின்ற அல்லது சற்றேனும் எதிர்பார்த்திராத சலுகைகளை வழங்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் அவர் நம் ஆள் என்பதை மற்றவர்கள் உணரும் வகையில் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு ஆக வேண்டிய வேலைகள் மளமளவென்று முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner



# சிறுவர் அரங்கம்

## சுண்டெலியின் பயம்

முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் முனிவர் ஒருவரின் குடிசை இருந்தது. அதனருகே ஒரு சின்ன மலை இருந்தது.

அந்த மலையினருகே உள்ள ஒரு துவாரத்தில் சின்ன சுண்டெலி ஒன்று வாழ்ந்து கொண்டிருந்தது.

அந்தக் காட்டில் பூனையின் நடமாட்டம் அதிகம் இருந்தது. ஆகவே, அது மிகவும் பயத்துடன் வாழ்ந்து வந்தது.

ஒருநாள் ஒரு பூனையின் பிடியிலிருந்து தப்பிய சுண்டெலி, ஆச்சிரமத்தில் உள்ள முனிவரைச் சரண் அடைந்தது. முனிவர் அதை அன்புடன் கவனித்தார். "பயப்படாதே!" என்று ஆறுதல் கூறினார். "நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"சுவாமி நான் பூனைகளைக் கண்டு அதிகமாகப் பயப்படுகிறேன். என்னையும் ஒரு பூனையாக மாற்றி விட்டால், நான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?" என்றது சுண்டெலி.

முனிவர் சிற்றெலியைப் பெரும் பூனையாக மாற்றினார். ஒரு மாதம் சென்றது. பூனை அவர் முன் வந்து நின்றது.

"சுவாமி, பூனை யாக இருப்பதிலும்பிரச்சினை. ஓநாய்கள் என்னை விரட்டுகின்றன" என்றது.



பூனையின் எண்ணத்தை அறிந்துகொண்ட முனிவர் அதை ஓநாயாக மாற்றினார். ஓநாய் சந்தோஷமாக திரும்பிச் சென்றது.

ஒருமாதம் சென்றவுடன், மீண்டும் ஓநாய் திரும்பி வந்து முனிவரைச் சரண் அடைந்தது.

"என்ன விடயம்?" என்றார் முனிவர். "கரடிகள் தொல்லை தருகின்றன!" என்றது ஓநாய்.

அதைக் கரடியாக மாற்றி அனுப்பி வைத்தார் முனிவர். மீண்டும் ஒரே மாதத்தில் திரும்பியது கரடி.

"இப்போதும் பிரச்சினையா?" என்று புன் சிரிப்புடன் கேட்டார் முனிவர்.

"ஆம் சிறுத்தைகள் என்னைக் கடிக்க வருகின்றன" என்றது.

"ஓஹோ!" என்ற முனிவர் அதை ஒரு சிறுத்தையாக உரு மாற்றினார்.

ஒருமாதம் சென்றவுடன் சிறுத்தை திரும்பி வந்தது.

"சிங்கங்கள் என்னைக் காட்டை விட்டு வெளியேறு என்று உத்தரவிடு கின்றன" என்றது.

"காரணம்?" என்ன என்று முனிவர் கேட்டார்.

(தொடரும்)

# மகாபாரதம்




உயர்ந்த ஆடை அணிகலன்களை இருவரும் அணிந்து இன்பம் அனுபவிப்போம் என்றாள். உடன் முனிவர், "எனக்கேது உயர் ஆடைகளும், அணிகலன்களும்" என்றார்.

"உம் தவ வலிமையால் அவற்றை அடையலாம்" என்றாள் லோபமுத்திரை.

ஆனால் தவத்தை தவறான வழியில் பயன்படுத்த விரும்பாத முனிவர் மன்னனிடம் சென்று பொருள் பெற விழைந்தார்.

அகத்தியர் முதன் முதலாய் ஸ்ருதர்வா என்ற மன்னனிடம் சென்றார். பெரும்செல்வத்தை நாடி வந்திருப்பதைத் தெரிவித்தார்.

மன்னனோ.." முனிவரே! நாட்டில் வரவும் செலவும் சரியாய் உள்ளது. நான் பெரும்செல்வத்திற்குஎங்குபோவேன்" என வருந்தினான்.

குடிகளைத் துன்புறுத்தி வரி வசூலித்துத் தருவதானால் அச் செல்வம் தனக்கு வேண்டாம் என்ற முனிவர் அம்மன்னனையும் அழைத்துக் கொண்டு பிரத்நஸ்வன் என்னும் மன்னனை சந்தித்தார்.

அம்மன்னனும்கையை விரித்துவிட அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு திரஸதஸ்யு என்ற மன்னனைச் சந்தித்தார்.

அவனும் வருவாய்க்கும், செலவிற்கும் சரியாகிவிடுகிறது என உரைக்க, அனைவரும் வேறு என்ன செய்வது என ஆலோசித்தனர். பின், மன்னர்களின் யோசனைப்படி இல்வலன் என்னும் அசுரனைக் காணச் சென்றனர்.

அவர்களைக் கண்ட அசுரன் பெரும் வரவேற்பளித்தான். வாதாபியை ஆட்டுக் கறியாக்கி அவன் விருந்து படைக்கப் போகிறான் என அனைவரும் அறிந்து கொண்டனர்.

மன்னர்கள் அஞ்சினர். அவர்களிடம் அகத்தியர், "வாதாபியை ஜீரணித்து விடுகிறேன். கவலை வேண்டாம்" என ஆறுதல் கூறினார். அனைவரும் உணவுக்காக அமர்ந்தனர். இல்வலன் மகிழ்ச்சியில் இருந்தான்.

ஆட்டுக்கறியை மேலும் மேலும் கேட்டு அகத்தியரே சாப்பிட்டார். உடன் இல்வலன்" வாதாபி இம் முனிவர் உன்னை ஜீரணிப்பதற்குள் வெளியே வா எனக் கூக்குரலிட்டான்.

ஆனால் அகத்தியரோ "வாதாபி.. உலக நன்மையின் பொருட்டு உன்னை நான் ஜீரணிக்கிறேன்" என்று கூறி மூன்று முறை தன் வயிறைத் தடவிக் கொடுத்தார்.

இல்வலனோ வாதாபி வா...வா.. என்றான். அகத்தியரோ.. "இல்வலா! இனி வாதாபி வர மாட்டான்.

அவன் கதை முடிந்தது. அவனை நான் ஜீரணித்து விட்டேன்"என்று கூறினார். தம்பியின் மரணம் அறிந்த இல்வலன் வருந்தினான்.

பின் அவன் அகத்தியரை நோக்கி, "முனிவரே! உங்களுக்கு என்ன வேண்டும்? என்ன வேண்டி நீங்கள் அனைவரும் வந்துள்ளீர்கள்?" என்றான்.

"அசுரா..உன்னிடம் அதிகம் செல்வம் இருப்பதாய் அறிந்தோம்.. செல்வத்தால்ஆக வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது. ஆகவே, மிக்க செல்வத்தைத் தருவாயாக" என்று கேட்டார். அதற்கு இல்வலன், "நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள்" என்றான் செருக்குடன்.

"இவர்கள் ஒவ்வொருவருக்கும் பதினையாயிரம் பொன் நாணயமும், பதினையாயிரம் பசுக்களும் கொடு.

எனக்கு முப்பதாயிரம் பசுக்களும், முப்பதாயிரம் பொன்னும், மற்றும் விரைந்து செல்ல இரண்டு குதிரைகளையும், பொன் தேரையும் கொடு" என்றார் அகத்தியர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

வயதும் வசதிக் குறைவும் பிரச்சினைகளே அல்ல. நம்பிக்கையுடன் உலகைப் பார்க்கும் பழக்கம் அதிகரித்தால் வாழ்க்கையில் சாதனைகள் தொடரும்.

– டாக்டர் ஜோசப் மர்பி

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii:lk

# தளர்ந்து போகும் கட்டத்தில் தமிழ் அரசியல் தலைமை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் பழுத்த அரசியல்வாதி.

அவரின் அரசியல் அனுபவம் அவருக்கு நிறைந்த பட்டறிவைக் கொடுத்திருக்கும்.

தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற தலைவர்களோடு ஒன்றாக அரசியல் பயணத்தை மேற்கொண்டவர் அவர்.

விடுதலைப் போராட்ட காலத்தில் அவரின் அரசியல் வகிபாகம் மிகக் குறைந்த அளவில் இருந்தது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அவரின் இருப்பு கொழும்பாக மாறியபோது, தென் பகுதி அரசியல் தரப்புகளுக்கும் அவருக்குமிடையில் நெருக்கமான உறவு ஏற்பட்டது.

அதிலும் குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர் என்ற அதி உயர் அதிகாரப் பதவிகளில் இருக்கக்கூடியவர்கள் விரும்பியோ விரும்பாமலோ இரா.சம்பந்தருடன் நட்பாகப் பழகியபோது, அன்றைய சூழ்நிலையில் அது அவருக்குப் பக்கதுணையாக இருந்தது.

குறிப்பாக சந்திரிகா குமாரதுங்க அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் இரா.சம்பந்தருக்கான பாதுகாப்பு எவ்வாறாக இருந்தது என்பதை எவரும் மறந்துவிடமாட்டார்கள்.

இதுதவிர, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் சம்பந்தருக்குமிடையில் மிக நெருக்கமான உறவு இருந்தது.

அரசியல் கலாசாரத்தின் அடிப்படைகள் எங்கும் இருக்கவே செய்யும் என்ற வகையில், மைத்திரிபால சிறிசேன தலைமையில் நல்லாட்சி ஆட்சிப் பீடமேறியபோது, இரா.சம்பந்தர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அ.அமிர்தலிங்கம் அவர்களே இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஒரே தமிழர் என்ற வரலாற்றுப் பதிவைத் திருத்தம் செய்து, இரா.சம்பந்தரும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார் என எழுதப்படுமளவில் சம்பந்தரை எதிர்க்கட்சித் தலைவராக்கி தமிழர்களின் உரிமைப் பிரச்சினை பற்றி அவர் வாய்திறக்காத அளவில் நல்லாட்சியினர் ஆக்கிக் கொண்டனர்.

இன்னும் குறிப்பிட்டுக் கூறுவதாயின், இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் ஆளுந்தரப்பின் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரும் அவர் தரப்பும் ஆதரவு வழங்கினர் என்றால், அஃது நல்லாட்சியில் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தர் இருந்தபோது நடந்த அதிசயமான உண்மை எனலாம்.

இவ்வாறாக தென்னிலங்கை ஆளும் அரசியல் தரப்புடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்த சம்பந்தரால் தமிழ் மக்களின் உரிமைக்காக உரத்துக் குரல் கொடுக்க முடியாமல் போயிற்று என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இந்தநிலையில் இப்போது சம்பந்தர் ஐயாவின் வயது மூப்புக் காரணமாக அவரின் அரசியல் என்பது தளர்வுற்றுப் போகிறது.

இதன் ஒரு வெளிப்பாடுதான் இந்தியாவுக்கான கூட்டமைப்பின் பயணத்தில் ஏற்பட்டுள்ள குழப்பங்களாகும்.

**சபையின் அமைதியின்மை தொடர்பில்**

# விசாரணை செய்ய விசேட குழு நியமனம்

அண்மையில் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினரொருவர் அமைதியற்ற முறையில் நடந்து கொண்டமை தொடர்பில் விசாரணை செய்வதற்காக விஷேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சபாநாயகர் இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் வைத்து அறிவித்துள்ளார்.

ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த குழுவில் விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

# நாட்டில் பால்மாவுக்கு மீண்டும் தட்டுப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால்மா மற்றும் தேசிய பால்மா என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

டொலர் தட்டுப்பாட்டின் காரணமாகவே நாடு முழுவதிலும் இத்தடைவனுப் பெற்றுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பால்மா இறக்குமதியாளர் சங்கத்தின் அதிகாரி ஒருவர் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

இதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவுக்கான கொடுப்பனவுகளை முறையாக செலுத்தாமையினால் வெளிநாட்டு பால்மா நிறுவனங்கள் புதிய கையிருப்புகளை அனுப்புவதில்லை.

தேசிய பால்மா விநியோகம் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக தேசிய பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ம-3)

**14 வயது சிறுமி உட்பட**

# வடக்கில் மேலும் 7 பேருக்கு தொற்று

14 வயது சிறுமி ஒருவர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 166 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 02 பேர் (14 வயது சிறுமி மற்றும் ஆண் ஒருவர்), சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர் (49, 52 வயது பெண்கள்), மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (பெண் - 60 வயது), யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவர் (ஆண் - 24 வயது)

ஆகியோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

# வவு.வடக்கு வைத்திய அதிகாரிக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரிக்கு கோவிட் தொற்று நோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த அதிகாரிக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து துரித அன்டிஜன் பரிசோதனையினை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது அவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3.299)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சுருவில், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், மணியர்குளம் (வீட்டுத்திட்டம்), நித்தியநகர், பெரிய உளுக்குளம், தீவிரகம, ரங்கீத்கம, சங்கராபுரம், துடாரிக்குளம், உளுக்குளம், உளுக்குளம் எல்.பி. குடியிருப்பு, வாரிக்குட்டியூர், ரோட் மண்ட் எலக்ரிக்கல், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், மருதோடை, ஓமந்தை, நம்பங்குளம், நாவற்குளம், அறவந்தலாவ-2, அறுகம்புல்வெளி, அறவந்துலாவ, நவகம்மானே பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக் குளம், நாகர் இலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக் குளம், அவுதசப்பிட்டிய, பழையனூர், பாண் சின்னகுளம், பாவற்குளம், பொன்னா வரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல் தோட்டம் வீட்டுத் திட்டம், சூடுவெந்தபுலவு, ட்ராக்-07, பாவற்குளம், விநாயகபுரம் வீட்டுத் திட்டம், நெளுங்குளம் நீர் வழங்கல் சபை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இயற்கையை வெற்றிகொள்

❖ உள்ளக்கதவைத் திறந்து வையுங்கள். நாலாபுறத்திலும் இருந்து நல்ல விஷயங்கள் அதற்குள் நுழைய அனுமதி அளியுங்கள்.

❖ எல்லாப் பூக்களில் இருந்தும் தேனைப் பெற்றுக் கொள்ளுங்கள். யாரிடமும் பகை பாராட்ட வேண்டாம். நட்புணர்வுடன் பழகுங்கள். ஆனால், உங்கள் சொந்தக்கருத்தை விடாப்பிடியாகப் பற்றுங்கள்.

❖ மனிதன் பிறந்திருப்பது இயற்கையை வெற்றி கொள்ளத் தானே தவிர, அதற்கு ஒருபோதும் பணிந்து போவதற்கு அல்ல.

❖ பாமர மக்களுக்கு உயர்வான எண்ணங்களைப் பரப்புவதற்காகவே புராணங்கள் எழுதப்பட்டன.

❖ கடவுளை வணங்கும் போது, அவரை நமது தாய் தந்தையாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், மற்றவர்களை சகோதர சகோதரிகளாக நேசிக்க மறந்து விடுகிறோம்.

❖ நாலுபேர் அறிய நல்லவனாக் காட்டிக் கொண்டு, பிறர் அறியாதவகையில் தீய செயல்களில் ஈடுபடுவது இழிவான செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## சபை நிதி வேலைத் திட்டம் 2021 - கட்டம் IV

01 தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02 தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 11.01.2021 ஆம் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆம் திகதிய மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03 இல. 1-10 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 021 224 0017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 07.12.2021 தொடக்கம் 20.12.2021 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 07.12.2021 ஆம் திகதியிலிருந்து 20.12.2021 ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/= (வரி நீங்கலாக) இனைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07 பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 21.12.2021ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு தவிசாளர், பிரதேச சபை, பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08 கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப் படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேலைக்குரிய கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | ஆலங்கட்டை பிள்ளையார் குறுக்கு வீதி, ஐயம்பிள்ளை வைரவர் வீதி – ஏழாலை NP/14/41/15/02(05)/CF/2021/33 | 0.894 | 60 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 9,000.00 | 08.03.2022 |
| 2 | களவாவோடை அம்மன் குறுக்கு வீதி உப ஒழுங்கை, கோட்டைக்காடு குறுக்கு வீதி 1ம் குறுக்கு ஒழுங்கை மற்றும் சிவன்கோவில் குறுக்கு வீதி உப ஒழுங்கை – ஏழாலை NP/14/41/15/02(05)/CF/2021/34 | 0.967 | 60 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 9,700.00 | 08.03.2022 |
| 3 | மாப்பாணர் வீதி – மயிலங்காடு, சமாதிகோவில் குறுக்கு வைரவர் வீதி– குப்பிளான் வடக்கு, அயட்டைப்புலம் குறுக்கு வீதி 2ம் ஒழுங்கை, குப்பிளான் தெற்கு NP/14/41/15/02(05)/CF/2021/35 | 1.178 | 60 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 12,000.00 | 08.03.2022 |
| 4 | மல்வம் உப வீதி 4ம் ஒழுங்கை, 5ம் ஒழுங்கை, ட்ரான்ஸ்போமர் 1ஆம் ஒழுங்கை மற்றும் சங்குவெலி அந்திரான் 7ஆம் கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2021/36 | 1.953 | 60 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 20,000.00 | 08.03.2022 |
| 5 | கே.கே.எஸ் குறுக்கு வீதி, சிங்கத்தின் கலட்டி 4ம் ஒழுங்கை, சிங்கத்தின் கலட்டி 3ம் ஒழுங்கையின் உப ஒழுங்கை, கடுகநாவல் வீதி மிகுதி - இணுவில் NP/14/41/15/02(05)/CF/2021/37 | 1.258 | 60 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 13,000.00 | 08.03.2022 |
| 6 | துவாக்கை வீதி குறுக்கு ஒழுங்கை, பருத்தியோலை வீதி- கந்தரோடை NP/14/41/15/02(05)/CF/2021/38 | 0.979 | 60 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 10,000.00 | 08.03.2022 |
| 7 | நாகம்மாள் வீதி NP/14/41/15/02(05)/CF/2021/39 | 0.701 | 60 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 7,500.00 | 08.03.2022 |
| 8 | சுன்னாகம் நூலகத் திருத்தம் NP/14/41/15/02(05)/CF/2021/40 | 1.265 | 60 நாட்கள் | C9 & C8 கட்டடப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 7,500.00 | 08.03.2022 |
| 9 | தாவடி மயான உப ஒழுங்கை மற்றும் கே.கே.எஸ் வீதியின் உப ஒழுங்கை, தாவடி மானிப்பாய் 1ம் வீதி NP/14/41/15/02(05)/CF/2021/41 | 2.026 | 90 நாட்கள் | C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 22.02.2022 | 20,500.00 | 22.03.2022 |
| 10 | சுன்னாகம் உப அலுவலகம், மீன் சந்தை, மரக்கறிச் சந்தை, மலசலகூடத் திருத்தம் NP/14/41/15/02(05)/CF/2021/42 | 2.294 | 90 நாட்கள் | C8 & C7 கட்டடப் புனரமைப்பு | 63 நாட்கள் | 22.02.2022 | 23,000.00 | 22.03.2022 |

10 கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 14.12.2021ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

**க.தர்ஷன்,**
**தவிசாளர், பெறுகைக் குழு.**
**வலிகாமம் தெற்கு. பிரதேச சபை, சுன்னாகம்.**

07.12.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

நடமாட்ட கட்டுப்பாடு தளர்த்தப்பட் டுள்ள நிலையில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து பிரவேசிப்பவர்களினூடாக இந்த நோய் பரவல் அடைவதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட் டத்தில் நேற்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-03)

# நாட்டில் மேலும் 741 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 741 பேர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட் டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற் றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 568 423 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றில் இரு ந்து 362 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குண மடைந்தவர்களின் எண்ணிக்கை 542, 688 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

# இலங்கைக்கு வந்தடைந்த பிரியந்தவின் சடலம்



(கொழும்பு)

பாகிஸ்தானில் படுகொலை செய்யப் பட்ட இலங்கையரான பிரியந்த குமார வின் உடல் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது

யூஎல் 186 விமானத்தின் மூலம் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பணியாற்றிய இலங் கையரான பிரியந்த குமார கடந்த வெள் ளிக்கிழமை மிக கொடூரமாக படுகொலை செய்யப்பட்டதுடன், உயிருடன் எரிக்கப் பட்டார்.

இந்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், பிரியந்தவின் மரணத்திற்கு நீதி வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுள்ளது. (ம-03)

## எரிவாயு அடுப்பு...

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு நவபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

சமையல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தருணமே எரிவாயுக் கசிவு காரணமாக எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் இதனால் எவருக்கும் பாதிப்புகள் எவையும் ஏற்படவில்லை. (ம-3,30)

## 23 பேர்...

தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 15 ஆண்களும் 08 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14,484 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## சிறப்பு முத்திரை...

அலுவல்கள் அதிகார சபையின் வழிகாட்டுதல்களுக்கு அமைய எரிவாயு நிறுவனங்கள் எரிவாயுவை சந்தைக்கு விற்பனைக்கு விட்டுள்ளன.

இதன்படி, லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் லோகோ வெள்ளை பின்னணியில் சிவப்பு நிறத்தில் பொலித்தீன் முத்திரையுடன் கூடிய புதிய சிலிண்டர்களை மொத்த சந்தைக்கு விற்பனைக்கு விட்டுள்ளது.

லாஃப்ஸ் நிறுவனம் அதன் எரிவாயு சிலிண்டர்களின் நீல நிற பின்னணியில் அதன் நிறுவனத்தின் லோகோவுடன் பொலித்தீன் முத்திரையையும் சேர்த்துள்ளது. (ம-3)

*(மேலும் ஒரு செய்தி உள்ளே)*

## நாவற்குழியில்...

யில் நடைபெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் 2 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதன்போது 20, 21 வயது இளைஞர்கள் இருவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## பாராளுமன்ற...

திருந்தது.

தமது பாதுகாப்பு தொடர்பில் கேள்வியெழுப்பிய எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்தனர்.

அத்துடன், சபாநாயகர் பாரபட்சமாக செயற்படுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் சபாநாயகர் செயற்படுவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்ற நிலையில் அரசாங்கத்துடன் இணைந்துள்ள உறுப்பினர்கள் பலன்களைப் பெறுகின்றனர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, சபாநாயகர் சுதந்திரமான முறையில் செயற்பட்டு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பிக்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளனர். (ம-3)

## காணாமல்போன...

குளித்து கொண்டிருந்தபோது திடீரென கடலில் மூழ்கியுள்ளனர்.

தேடுதலின்போது ஒருவருடைய சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட நிலையில் மற்றுமொருவருடைய சடலம் நேற்று காலை தீர்த்தக்கரை பகுதியில் மீட்கப்பட்டுள்ளதுடன் மூன்றாவது நபரின் சடலம் அளம்பில் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

மதவுவைத்தகுளத்தை சேர்ந்த மனோகரன் தனுஷன் (வயது-27), சிவலிங்கம் சகிலன் (வயது-26), தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த விஜயகுமாரன் தர்சன் (வயது-26) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். (ம-3,250,281,299)

## கிளிநொச்சியில்...

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## சபாநாயகரின்...

பாராளுமன்றத்தில் சபாநாயகர் பக்கச்சார்பாகச் செயற்படுவதைக் கண்டுகொள்ள முடியுமாக இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி எம்.பியான மனுஷ நாணயக்காரவைத் தாக்க முற்பட்ட போதும் சபாநாயகர் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சபாநாயகரின் கண்முன்னே நடைபெற்ற சம்பவத்துக்கு நடவடிக்கை எடுக்காமல் குழுவொன்றை நியமிப்பது வேடிக்கையான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சபாநாயகரானதும் கட்சியின் பதவியைக் கைவிட வேண்டும் எனவும் இவர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வெலிகம பிரதேச அமைப்பாளராகச் செயற்படுகின்றார் எனவும் கிரியெல்ல எம்.பி. குற்றஞ் சாட்டியுள்ளார். (ம-3)

## ஆர்ப்பாட்டத்தில்...

யுள்ளார்.

சபைக்குள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று காலை பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளையில் அந்த இடத்துக்குச் சென்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அங்கிருந்தவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடியுள்ளதுடன், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும்போது இதற்கும் மேல் எம்.பிக்களை கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். (ம-3)

## இந்தியா...

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட சில முக்கிய உடன்படிக்கைகள் அமுல்படுத்தப்படவில்லை என இந்தியா குற்றம் சுமத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் ஆங்கில நாளிதழ் ஒன்று இதுபற்றிய செய்தியை வெளியிட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையில் கையொப்பமிடப்பட்ட இவ்வாறான சில முக்கிய உடன்படிக்கைகள் கைவிடப்பட்டுள்ளதாக இந்தியா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் அமுல்படுத்துவதாக இணங்கப்பட்ட மூன்று முக்கிய உடன்படிக்கைகள் அமுல்படுத்தப்பட வில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

## வட்ட...

வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் புளியம்பொக்கணை பகுதியைச் சேர்ந்த ரவிகரன் டிலக்சன் (வயது-17) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் இளம் பெண் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தரும புரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,100,316)

## தலைக்கவசத்துடன் வீட்டுச் சமையல் உயிர்தப்பிய பெண்

பன்னல, ஹெந்திரிப்புவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மாலை சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

எவ்வாறாயினும் தலைக்கவசம் அணிந்திருந்தமையினால் தனக்கு காயம் ஏற்படவில்லை என அந்த வீட்டின் பெண் தெரிவித்துள்ளார்.

நான் இந்த நாட்களில் தலைக்கவசம் அணிந்துகொண்டே சமைக்கின்றேன். எரிவாயுவை பயன்படுத்துவதை தவிர வேறுவழியும் இல்லை என்றார். (ம-3)

## வவுனியாவிலும்...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவர் இரவுச் சாப்பாடு சமைத்துக் கொண்டிருந்தபோது எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

குறித்த பெண் எரிவாயு அடுப்புகள் அண்மைக்காலமாக வெடிப்பதால் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருந்தமையால் உடனடியாக சிலிண்டரை அணைத்துவிட்டு அங்கிருந்து வெளியேறியுள்ளார். குறித்த வெடிப்பின்போது எரிவாயு அடுப்பு உடைந்து சேதமாகியுள்ளது.

இருப்பினும், வீட்டில் உள்ளவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் இது தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,250)


தன நிதானய
திகதி - 2021.12.06
சீட்டிழுப்பு இலக்கம் - 638
S 04 48 51 60

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 06.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2903
T 01 10 63 72

மஹஜன சம்பத
திகதி 2021/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 4608
P 3 9 5 0 5 3

மெகா பவர்
திகதி 06/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0956
Z 25 09 42 44 60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1177
சிம்மம் 2 8 0 1 6 1

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல. 1411
சீட்டிழுப்பு திகதி 06.12.2021
ரூ. 5,447,280
28 52 55 74 A

சனிதா
சீட்டிழுப்பு இல. 3740
சீட்டிழுப்பு திகதி 06.12.2021
ரூ. 3,906,940
வெற்றி இலக்கங்கள் 01 37 65 73 B

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1585
சீட்டிழுப்பு திகதி 06.12.2021
C 02 09 44 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் - 73,431,486/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 06.12.2021
வெற்றி வாரம் 3297
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 23 48 52 53
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,375,000/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1791
சீட்டிழுப்பு திகதி 06.12.2021
வெற்றி இலக்கங்கள் 26 52 53 59 J
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 28,619,560/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Scanned with CamScanner

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (8955)

**076 825 7716** (ஆகாஸ்)



**English ஆங்கிலம்**

பிரத்தியேக வகுப்புகள்
உங்கள் வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும். (யாழ்ப்பாணம்) (8964)

**077 658 9443**



**விற்பனைக்கு**

Bajaj Discover 135 நல்ல நிலையில் உள்ளது. உடன் விற்பனைக்கு உண்டு. (C-3181)

**077 179 1963**
**075 164 0104**



**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

# Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI, British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

No.1
**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**

புதிய பிரிவு ஆரம்பம்
8/12/2021
Wed 9:30 am (C-3178)

German - Germany, Swiss நாட்டுக்கு செல்வோருக்கு
French - France நாட்டுக்கு செல்வோருக்கு

**DMI COMPUTER EDUCATION**
0777 24 07 07

021 226 2470 0777577333 | 021 227 0775 0777227074 | 021 224 1970 0776032300 | 021 225 6665 0761354503 | 021 228 5655 0776398096



**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

(C-3132)

**0768226240** DHL



**விற்பனைக்கு**

ஜேசி இன பசுக்கன்று
விற்பனைக்கு. (8950)

**077 663 1742**



**கடை வாடகைக்கு**

உரும்பிராய் தெற்கில் வியாபாரம்
நடத்திக் கொண்டிருக்கும் 2 கடைகள்
வாடகைக்கு உண்டு. (8949)

**077 002 5256**



**VISA விண்ணப்பங்கள்**

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
V2 TRAVELS

**0777-068-777**



# காணி விற்பனைக்கு




**யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில்**
**கணக்கர் வளவு 22 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**
**(நிலப்பரப்பு)**

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
14 அடிப் பாதையுடன்
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு** (8962)

**077 814 7389, 077 614 7333**


# மரண அறிவித்தல்

## தம்பையா வேலாயுதபிள்ளை

(ஓய்வுநிலை அதிபர் – யா/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை)



**பிறப்பு : 24.01.1942**
**இறப்பு : 06.12.2021**

இணுவில் தெற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (06.12.2021) திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் இந்துமதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னம்மா (குங்கிலியம்) மற்றும் இராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி மேகலா சுதாகரன் (ஆசிரியை - யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), திருமதி நிரஞ்சலா கிருஷ்னேந்திரன் (பிரதி திட்டமிடல் பணிப்பாளர், வடக்கு மாகாண சபை), சனாதனன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாகரன், கிருஷ்னேந்திரன் (பிரதேச செயலாளர், பூநகரி) ஆகியோரின் மாமனாரும் சிவானந்தன், ஸ்ரீதரன், யோகானந்தன், ஜெயானந்தன், சுகன்யா ஆகியோரின் மைத்துனரும் யோகநாதனின் சகலனும் சுயோதமியின் பெரியதந்தையும் மாதுமை, மாதனன், உமைபாலன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவோதயன், சிவரூபன், சுகந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில் தெற்கு) நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (8963)

பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில் தெற்கு. **076 795 2823**

தகவல் :-
**வே. சனாதனன்** (மகன்)

# மரண அறிவித்தல்

பிறப்பு
10
–
11
–
1947



இறப்பு
05
–
12
–
2021

## விவேகானந்தராசா தவமலர்

முல்லைத்தீவு தண்ணீரூற்று மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விவேகானந்தராசா தவமலர் நேற்று முன்தினம் (05.12.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பார்பதி தம்பதியரின் பாசமிகு மருமகளும் விவேகானந்தராசா அவர்களின் அன்பு மனைவியும் கருணானந்தராசா, தவராணி, சறோசா, காலஞ்சென்ற தவரஞ்சிதம் மற்றும் வனிலாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வித்தியானந்தராசா, காலஞ்சென்ற சர்வானந்தராசா, காலஞ்சென்ற சச்சிதானந்தராசா, காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் யோகராணி, யோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் யசோதரன் (இலங்கை), குமுதராஜனி (லண்டன்), கிரிதரன் (சுவிஸ்), தசீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுகந்தி (ஆசிரியை - மு.இந்து தமிழ் கலவன் பாடசாலை), றெஜிந்திரன் (லண்டன்), சுபாஜினி (இந்தியா), லக்சி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வெர்ஜினி, றெமி, திலக்சன், சயூகன், கரீஸ்மன், நிசாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் கற்பூரப்புல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

N. Vivekanantharasa : 076 964 9806, V. Yasotharan : 076 921 6062,
R. Kumutharajani : 00447956085449, V. Kiritharan : 0041779084707,
V. Thaseenthiran : 0041763181105 (C-3183)

தண்ணீரூற்று,
முள்ளியவளை.

தகவல் :-
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Scanned with CamScanner